அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் / மெற்றிக் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கவனத்திற்கு

2026ஆம் ஆண்டு அரசு / அரசு நிதியுதவி பெறும் / தனியார் பள்ளிகளில் +2 தேர்ச்சி பெற்ற தகுதியுடைய மாணவ / மாணவிகள் உயர்கல்வி பயில அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை திட்டத்தின் மூலம் உயர்கல்வி உதவித் தொகை பெறுதல் – மாணவர்களுக்கு தகவல் தெரிவிக்க கோருதல் – சார்பு.

---

# UNIVERSAL HIGHER EDUCATION TRUST

(A Registered Charitable Trust - No: 982/2012)

13.05.2026

திருமதி. ஆர். பிரேமலதா அவர்கள்
முதன்மை கல்வி அலுவலர் - வேலூர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் "B" பிளாக்
வேலூர் – 632016.

மதிப்பிற்குரிய முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு,

வணக்கம்!

**பொருள்:** அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் கல்வி உதவித்தொகை விண்ணப்பம் வழங்க **"சுற்றறிக்கை"** அனுப்புதல் - தொடர்பாக.

இந்தியாவில் உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதத்தில் (GER - Gross Enrollment Ratio) வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் (ஒருங்கிணைந்த வடஆற்காடு மாவட்டம்) முன்மாதிரியாக விளங்கவும், இம்மாவட்டங்களில் மேல்நிலைப்பள்ளி கல்வியை முடித்த அனைத்து ஏழை எளிய மாணவர்கள் இடை நிற்றலின்றி உயர்கல்வி கற்க உதவிச்செய்ய வேண்டும் என்ற சமூக பொறுப்புணர்வுடன், **வி.ஐ.டி-யின் நிறுவுநர் & வேந்தர் கல்விக்கோ. முனைவர். கோ. விசுவநாதன்** அவர்களின் தலைமையில், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை 2012-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இந்த நான்கு மாவட்டத்தில் உள்ள 38 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம், இதுவரை 11,158 மாணவ, மாணவியர்களுக்கு அவர்கள் விரும்பும் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை வழங்கி வருகின்றது.

மேலும் வரும் கல்வியாண்டிற்கான **2026-27** கல்வி உதவித்தொகை விண்ணப்பம் **20.05.2026** முதல் **29.05.2026** வரை காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை (சனி மற்றும் ஞாயிறு நீங்கலாக) எட்டு வேலை நாட்களில் இத்துடன் இணைத்துள்ள அட்டவணைப்படி 20 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் வழங்கப்பட உள்ளது.

எனவே, தாங்கள் தயவு கூர்ந்து **வேலூர்** மாவட்டத்திலுள்ள அனைத்து (அரசு, அரசு உதவி மற்றும் தனியார்) மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், இத்துடன் **இணைத்துள்ள அட்டவணையை சுற்றறிக்கையாக** அனுப்பி, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற்று உயர்கல்வி பயில உதவிப்புரியுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி!

இப்படிக்கு,

P. S...

முனைவர். ப. சுந்தர் ராஜ்
உதவி திட்ட இயக்குநர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

No. 215, Dr. M.G.R. Block, VIT Campus, Vellore - 632 014. Tamil Nadu, India. Tel. : +91 416 220 2196
Fax : +91 416 2243092 E-Mail : pd.uhet@gmail.com Web : www.uhetrustindia.org

## UNIVERSAL HIGHER EDUCATION TRUST

(A Registered Charitable Trust - No: 982/2012)

**UHET's அனைவர்க்கும் உயர்கல்வி திட்டம்**

மேல்நிலைப் பள்ளிக்கல்வியை முடித்த அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பயில வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற சமூக நோக்கத்துடன், **வி.ஐ.டி-யின் நிறுவுநர் & வேந்தர் கல்விக்கோ. முனைவர். கோ. விசுவநாதன்** அவர்களின் தலைமையில், 2012-ஆம் ஆண்டு **"அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை"** தொடங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது.

வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் அரசு, அரசு உதவிப்பெறும் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் 2026-ஆம் ஆண்டு +2 தேர்ச்சிபெற்ற தகுதியுடைய மாணவ / மாணவிகள் உயர்கல்வி பயில அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை-யின் **அனைவர்க்கும் உயர்கல்வி திட்டத்தின்** மூலம் உயர்கல்வி உதவித்தொகை பெற விண்ணப்ப படிவம் 20.05.2026 முதல் 29.05.2026 வரை காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை (சனி மற்றும் ஞாயிறு நீங்கலாக) எட்டு வேலை நாட்களில், மாணவர்கள் தங்களுக்கு அருகாமையிலுள்ள கீழ்க்காணும் ஏதேனும் ஓர் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **மாணவ / மாணவிகள் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் (+2 Provisional Mark Sheet) நகல் கொண்டு வரவும். (விண்ணப்பம் மாணவர்களிடம் மட்டும்தான் வழங்கப்படும்)**

| வ. எண் | | விண்ணப்பம் கிடைக்கும் இடங்கள் |
|---|---|---|
| 1 | வேலூர் மாவட்டம் | அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை<br>#215, டாக்டர். எம்ஜிஆர் பிளாக், விஐடி வளாகம், வேலூர் |
| 2 | | நகராட்சி அலுவலகம், குடியாத்தம் |
| 3 | | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அணைக்கட்டு |
| 4 | திருப்பத்தூர் மாவட்டம் | இந்து மேல்நிலைப்பள்ளி, ஆம்பூர் |
| 5 | | இஸ்லாமியா பெண்கள் கல்லூரி, வாணியம்பாடி |
| 6 | | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பத்தூர் |
| 7 | இராணிப்பேட்டை மாவட்டம் | ஸ்ரீ இராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஆற்காடு |
| 8 | | பழைய நகராட்சி அலுவலகம், சோளிங்கர் (காந்தி சிலை எதிரில்) |
| 9 | | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அரக்கோணம் |

**மேலும் தகவல்களுக்கு:**
உதவி திட்ட இயக்குநர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை
# 215, டாக்டர். எம்ஜிஆர் பிளாக், விஐடி வளாகம், வேலூர்.
0416 - 2202196, 9841181432

No. 215, Dr. M.G.R. Block, VIT Campus, Vellore - 632 014. Tamil Nadu, India. Tel. : +91 416 220 2196
Fax : +91 416 2243092 E-Mail : pd.uhet@gmail.com Web : www.uhetrustindia.org

13/5/26

**முதன்மைக் கல்வி அலுவலர்**
**வேலூர்**

13/5/26

**பெறுநர்**

தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அரசு / அரசு தியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள்,
மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.